# THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

## (இரண்டுமதிப்பெண் வினாக்கள்)

**கடவுளும்கந்தசாமிப்பிள்ளையும்**

1.கடவுள் கந்தசாமிப்பிள்ளையை எங்கு சந்தித்தார் ? என்ன கேட்டார்?

பிராட்வேயும் எஸ்பிளனேடும் கூடும் இடத்தில் சந்தித்தார். திருவல்லிக்கேணிக்கு எப்படிச் செல்வது என்று கேட்டார்.

2. கந்தசாமிப்பிள்ளை நடத்திய பத்திரிகையின் பெயர் என்ன?

சித்த வைத்திய தீபிகை.

3. கந்தசாமிப்பிள்ளையின்வீட்டுமுகவரிஎன்ன?

நெம்பர்ஏழு.ஆபிஸ்வேங்கடசலம் முதலி சந்து. திருவல்லிக்கேணி.

4. கந்தசாமிப்பிள்ளையின் மனைவி மகள் பெயர்களைக் கூறுக?

மனைவி காந்திமதி,மகள் வள்ளி.

5.கந்தசாமிப்பிள்ளை நடத்திய சித்தவைத்திய பத்திரிகையின் சந்தா விவரங்கள்கூறுக?

தீபிகை மாதப்பத்திரிகை. வருஷ சந்தா உள்நாட்டுக்கு ரூபாய் ஒன்று; வெளிநாட்டுக்கு இரண்டே முக்கால்; ஜீவிய சந்தா ரூபாய் 25.

6. கடவுளை யாரிடம் அழைத்துச் சென்றார்?

திவான் பகதூர் பிரகதீசுவர சாஸ்திரிகளிடம் .

7.கடவுளும்கந்தசாமிப்பிள்ளையும் கதையின் கரு யாது?

கடவுளால் மனிதர்களுக்கு எட்ட நின்று வரம் கொடுக்க இயலுமே தவிர மனிதர்களுடன் சேர்ந்து வாழ இயலாது.

8.கந்தசாமிப்பிள்ளை கடவுளை என்ன பெயர் சொல்லி அழைத்தார்?

பழையபரமசிவம்

9.கடவுள் கந்தசாமிப் பிள்ளையின் குழந்தையுடன் என்ன ஆடினார்?

வட்டு விளையாடினார்

10. அதிதி என்றால் என்ன?

விருந்தாளி என்று பொருள்.

11. கந்தசாமிப்பிள்ளை தான் என்ன தொழில் செய்வதாகக் கடவுளிடம் கூறினார்?

சித்த வைத்திய தீபிகை என்னும் வைத்திய சாஸ்திர பத்திரிகையை நடத்துவதாகக் கூறினார்.

12. கடவுளும்கந்தசாமிப்பிள்ளையும் கதையில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்கள் யார் ?

கந்தசாமிப்பிள்ளை, கடவுள், கந்தசாமியின் மனைவி காந்திமதி, மகள் வள்ளி, திவான் பகதூர் பிரகதீசுவர சாஸ்திரிகள், ரிக்ஷா ஓட்டுனர் பார்வதி தேவி.

**செல்லம்மா**

1.செல்லம்மாவின் கணவர் பெயர் என்ன?

பிரம்மநாயகம்

2.பிரம்மநாயகம் எங்கு வேலைபார்த்தார்?

துணிக்கடையில்

3.செல்லம்மா எந்த நிறப்புடவையைத் தனக்காக எடுத்துக்கொண்டாள்?

பச்சை நிறப்புடவையை எடுத்துக்கொண்டாள்

4.செல்லம்மா கதை உணர்த்துகின்ற செய்தி யாது? கணவன்மனைவிக்கிடையிலான அன்புணர்வை வெளிப்படுத்து கிறது.

5.செல்லம்மா கதை எந்த உத்தியில் அமையப்பெற்றுள்ளது?

பின்னோக்கு உத்தி

6. செல்லம்மா கதையில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களைக் குறிப்பிடுக ?

கணவர் பிரம்மநாயகம் செல்லம்மா, துணிக்கடை முதலாளி, சித்தவைத்தியர், கடையின் பணியாள் முனிசாமி.

**ஆற்றங்கரைப் பிள்ளையார்**

1.கிழவர் கட்டிய மேடையின் பெயர் என்ன?

சமூக மேடை

2. கிழவர் நட்டு வைத்த மரங்கள் யாவை?

சமயதர்மமாகிய அரசமரம். ராஜதர்மமாகிய வேப்ப மரம்

3. பிள்ளையாருக்கு உதவ வந்த இரண்டு கிழவர்கள் யார்?

புத்தர், ஜீனன்

4. இரண்டு கிழவர்கள் பிள்ளை யாருக்கு எவ்வாறு உதவினர்?

புத்தர் மரங்களின் கிளைகளை வெட்டி வெயில்படுமாறு செய்தார். ஜீனன் பிள்ளையாருக்காக புதிதாக மேடையமைத்தார்.

5. தாடிக்கிழவன் எந்தச் செடியை நட்டு வைத்தான்?

ரோஜாச் செடியை

6. படகில் வந்தவனின் தோற்றம் எப்படி இருந்தது?

உடம்பு வெண்மையாகவும், தலைமயிர்பொன்னிறமாகவும், நீண்டதாடி ஆபரணம் போலவும் அலங்கரித்தது. கையில் கறுப்புத்தோல் அட்டை போட்ட

புத்தகமும், சிலுவையும் கொண்டுவந்தான். வெண்மையான நீண்ட அங்கியும் அணிந்திருந்தான்.

7. பிள்ளையாரைக்காப்பாற்ற வந்த மூன்று பெரியவர்கள் யார்?

சங்கரன்,இராமானுஜன்,மத்துவன்

8. பிள்ளையாரின் கனவு என்ன ?

தான் பெரிதாக வளர்வது போலவும், முகத்தில் புன்சிரிப்பும், தும்பிக்கை சற்று அசைவது போலவும் கனவு காண்கிறார்.

9. ஆற்றங்கரைப்பிள்ளையார் கதை எத்தன்மையில் அமைந்துள்ளது?

குறியீட்டுத்தன்மையோடு அமைந்துள்ளது.

**ஒருநாள் கழிந்தது**

1. ஒருநாள் கழிந்தது கதையில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்கள் யாவர்?

முருகதாசர்,மனைவி கமலா, மகள் அலமு,பல்லுமாமா என்றழைக்கப் படும் சுப்பிரமணியப்பிள்ளை, கடைக்காரர்.

2.முருகதாசர் என்ன வேலை பார்த்தார் ?

எழுத்தாளராக வேலை பார்த்தார்.

3. முருகதாசர் எவ்வளவு ரூபாய் சம்பளத்தில் வேலைபார்த்தார்?

மாதம் முப்பது ரூபாய்

4.முருகதாசர் சுப்பிரமணிய பிள்ளையிடமிருந்து எவ்வளவு காசு கடனாகப்பெற்றார்?

எட்டணா

**மனிதயந்திரம்**

1. மனிதயந்திரம் கதையில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களைக் குறிப்பிடுக.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மாவடியா பிள்ளை, டிக்கெட் குமாஸ்தா, போலீஸ் நண்பர் கலியாணசுந்தரம்,முதலாளி ஐயா.

2. மீனாட்சிசுந்தரம் எவ்வளவு வருமானத்தில் வேலை பார்த்தார்?

மாதம் ரூபாய். 20

3. மீனாட்சிசுந்தரம் எவ்வளவு ரூபாய் பற்று வைத்து எழுதினார்?

பதினொன்றே காலணா

4. மீனாட்சிசுந்தரம் எங்கு செல்வதற்காக இரயிலில் ஏறினார்?

தூத்துக்குடி சென்று அங்கிருந்து கொழும்பு செல்வதற்காக.

**(ஐந்து மதிப்பெண்)**

5. மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் ஆசைகள் என்ன?

கொழும்பு சென்று தங்க அரைஞாண், கடிகாரச் சங்கிலி, வாட்டசாட்டமான உடம்பு, கையில் நல்ல ரொக்கம், கொழும்புத் பிள்ளை என்ற பட்டம், ஊரில் உள்ளவர்கள் அண்ணாச்சி சௌக்கியமா? என்று கேட்க வேண்டும். ஊரில் நடைபெறும் கலியாணமும் இழவும் இவர் வருகையை எதிர்பார்த்துத்தான் தம் பாதையில் செல்லவேண்டும். தம்இஷ்டப்படி ஆட மீனாட்சியும் ஸ்டோர் கடையும் கைக்குள் வரவேண்டும்.

6. மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நேர்மை வெளிப்படுந் தன்மையை மனிதயந்திரம் கதை வழி விளக்குக.

- ★ தூத்துக்குடி செல்வதற்காக வேலைபார்த்த கடையிலிருந்து நாற்பதும் சில்லறையும் எடுத்துக்கொண்டார்.
- ★ டிக்கெட் கவுண்டரில் பத்தேகாலணாவைக் கொடுத்து தூத்துக்குடிக்கு டிக்கெட் வாங்கினார்
- ★ இரயில்வே போலீசைச் சேர்ந்த நண்பர் கலியாணசுந்தரத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார்
- ★ பிள்ளையவர்கள் நண்பரைப் பார்க்காமல் , காக்கி உடையைப்பார்த்துத் திடுக்கிட்டு , தன்னையறியாமல் தூத்துக்குடி வரை என்றார்.
- ★ கலர் சோடாவை ஓரணாவைக் கொடுத்து வாங்கிக் குடித்தார்.
- ★ இரயில் புறப்படும் நேரத்தில் கீழே இறங்கி ஸ்டேசனைவிட்டு வெளியேறினர்.
- ★ பாஸ் இல்லாமல் எப்படிக் கப்பலில் செல்வது என்ற ஞாபகம் வந்தது.
- ★ புத்தியைச் செருப்பால்தான் அடிக்கணும் என்று சொல்லிக்கொண்டார்.
- ★ கடைக்கு வந்து சிட்டையை எடுத்து 'மீனாட்சி பற்று பதினொன்றே காலணா' என்று எழுதினார்.

1. முருகதாசரின் எழுத்துத்திறமை குறித்து எழுதுக?

சாகாவரம் பெற்ற கதைகள் எழுதுபவர்.

விளம்பரக் கம்பெனி மாதம் முப்பது ரூபாய்க்கு அவரது கற்பனைத்திறமையைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டது.

சோயாபீன் முதல் மெழுகு வர்த்தி வரையிலும் வெளிநாடுகளிலிருந்து வந்துகுவியும் பண்டங்களின் காவியங்களை இயற்றிக்கொண்டிருந்தார்.

2. தாடிக்கிழவன் என்ன செய்தான்?

வேப்பமரத்தைத்தூக்கி நிறுத்தினான். தான் கொண்டுவந்த ரோஜா செடியை அரச வேப்ப மரங்களுக்கிடையில்நட்டுவைத்தான். செத்த பசுமாட்டின் மாமிசத்தை உரமாக இட்டா மாட்டின் தோலைவைத்துவேப்பமரத்தடியில் குடிசை கட்டிக்கொண்டான். உடைவாளை வேப்பமரத்தடியில் மாட்டி வைத்தான்.